**பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்**

**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–6, அவர்களின்**

**செயல்முறை ஆணை**

**பிறப்பிப்பவர் : மரு.எஸ்.சம்சாத்பேகம், எம்பிபிஎஸ்., டிஜிஓ., (FAC),**

ந.க.எண்.28620/நிபி8/1/2022 நாள்: 03.08.2022

பொருள்: நிர்வாகம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.க.வேல்முருகன், (த/பெ. (லேட்) திரு.பி.கருப்பன், அறுவை அரங்க உதவியாளர், அரசு மருத்துவமனை, இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்) – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியமர்த்தப்பட்டது – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள்: 23.01.2020 மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்.
2. அரசு கடித எண்.8014/ஏடி2/2021–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள்: 20.05.2021.
3. இவ்வியக்கக கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.54495/நிபி8/1/2019, நாள்: 29.12.2020.
4. இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.2492/நி2/2/2021, நாள்: 18.01.2021.
5. நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வரின் கடித ந.க.எண்.262/நி3/2022, நாள்: 06.05.2022.

------

**ஆணை :**

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம், அரசு மருத்துவமனையில் அறுவை அரங்க உதவியாளராகப் பணிபுரிந்து, பணியிலிருக்கும் போது 30.08.2003 அன்று இயற்கையெய்திய திரு.பி.கருப்பன் என்பவர் 20.10.1972 பணிவரன்முறைப்படுத்தப்பட்டு, 19.10.1973 பிற்பகல் தகுதிகாண்பருவம் முடித்துள்ளார். அவரின் பிறந்த தேதி 06.05.1949, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 31.05.2007 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரராகிய அவரது மகன் திரு.க.வேல்முருகன் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)–ன்படி, நாமக்கல் மாவட்டம், இராசிபுரம், அரசு மருத்துவமனையில் அறுவை அரங்க உதவியாளராகப் பணிபுரிந்து, பணியிலிருக்கும் போது 30.08.2003 அன்று இயற்கையெய்திய திரு.பி.கருப்பன் என்பவரின் மகனும் வாரிசுதாரருமாகிய திரு.க.வேல்முருகன் (பிறந்த தேதி 23.07.1984)

Scanned with OKEN Scanner

தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் ரூ.19500-62000/- நிலை 8 (Level-8) என்ற சம்பள முறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, கரூர் அரசு மருத்துவக் கல்லூரியில் 10.02.2021 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தற்போது பணியிடமாறுதலில் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரியில் 05.05.2021 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.க.வேல்முருகன் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை-1இல் காணும் அரசாணையின்படி அவர் பணியில் இணைந்த நாளான 10.02.2021 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

எஸ். சம்சாத்பேகம்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
இயக்குநர் (FAC)

பெறுநர்
திரு.க.வேல்முருகன்,
இளநிலை உதவியாளர்,
அரசு மருத்துவக் கல்லூரி, நாமக்கல்.
-- நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மூலமாக.

நகல்
1) மருத்துவக் கல்வி இயக்ககம், சென்னை-10.
2) நலப்பணிகள் இணை இயக்குநர், நாமக்கல்.
3) முதல்வர், அரசு மருத்துவக் கல்லூரி, நாமக்கல்.
4) நிர்வாகப்பிரிவு - 2.
5) இருப்புக்கோப்பு / உபரி -1.

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

நிர்வாக அலுவலர்

4/8/22

Scanned with OKEN Scanner